# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## (10.06.2015 முதல் 14.06.2015)

**அறிக்கை எண் 44/2015** **தேதி: 09.06.2015**

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 30°செ முதல் 39°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 22°செ முதல் 29°செஆகவும் பதிவானது கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 19°செ முதல் 24°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 11°செ முதல் 14°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் ஒரு சில இடங்களில் இலேசான தூறல் மழை காணபட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (10.06.2015 முதல் 14.06.2015)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 34°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 72 முதல் 74 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 68 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 10.06.15 | 2 | 34 | 26 | 6 | 74 | 68 | 10 | தென் மேற்கு |
| 11.06.15 | 1 | 34 | 26 | 6 | 74 | 68 | 10 | மேற்கு |
| 12.06.15 | 2 | 34 | 26 | 6 | 74 | 68 | 10 | தென் மேற்கு |
| 13.06.15 | 4 | 34 | 26 | 6 | 72 | 68 | 10 | தென் மேற்கு |
| 14.06.15 | 3 | 34 | 26 | 6 | 72 | 68 | 10 | தென் மேற்கு |

## வேளாண் அறிவுரை

- ✓ காற்றின் வேகம் அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் முன் பருவம் நடவு செய்த கரும்பு மற்றும் 5 மாதங்களான வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.
- ✓ மழை எதிர்பார்க்கப்படுவதால் போதுமான வடிகால் வசதியுடன் குறுகிய கால நெல் இரகங்களை நடவு செய்யவும்.
- ✓ இறவை மக்காச்சோளம் மற்றும் சூரியகாந்தி நடவு செய்வதற்கு இதுவே உகந்த தருணமாகும்.
- ✓ கறவை மாடுகளில் மடிவீக்க நோயை கட்டுப்படுத்த பொட்டாசியம் பர்மாங்கனேட் கொண்டு பால் மடியை கறப்பதற்கு முன்னும் பின்னும் சுத்தம் செய்யவும்.

## குறுஞ்செய்தி

- ✓ மழை எதிர்பார்க்கப்படுவதால் போதுமான வடிகால் வசதியுடன் குறுகிய கால நெல் இரகங்களை நடவு செய்யவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்
த.நா.வே.ப.கழகம், கோவை.